[வலைப்பின்னல் மாற்றுமுறை]

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## *1999 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, பெரிய மௌலானா, ஸெய்ன் மௌலானா ஸியாரங்கள் மற்றும் தக்கியாக்கள் அபிவிருத்திச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டம்*

---

[*1999, ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 30 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது*]

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---


*1999, செத்தெம்பர் 3 ஆந் திகதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக்** குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

**விலை: ரூபா 6.50** **தபாற் செலவு : ரூபா 3.50**

**1999 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க பெரிய மௌலானா, ஸெய்ன் மௌலானா ஸியாரங்கள் மற்றும் தக்கியாக்கள் அபிவிருத்திச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டம்**

[*1999 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 30 ஆந் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.*]

*ச.வ. – ஓ. 58/96*

**பெரிய மௌலானா, ஸெய்ன் மௌலானா ஸியாரங்கள் மற்றும் தக்கியாக்கள் அபிவிருத்திச் சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்**

*முன்னுரை*

"பெரிய மௌலானா, ஸெய்ன் மௌலானா ஸியாரங்கள் மற்றும் தக்கியாக்கள் அபிவிருத்திச்சங்கம்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான அபிவிருத்திச்சங்கமொன்று, அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க, சொல்லப்பட்ட அபிவிருத்திச்சங்கத்தோடு சம்பந்தப்பட்ட எல்லாக் குறிக்கோள்களையும் கருமங்களையும் பயனுறக் கொண்டு நடாத்தும் நோக்கத்திற்காக இதற்கு முன்னர் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும்:

சொல்லப்பட்ட அபிவிருத்திச்சங்கம் எக்குறிக்கோள்களுக்கு எனத் தாபிக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும் கூட்டிணைக்கப்படவென விண்ணப்பித் துள்ளதாதலாலும் அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொது மக்கள் நன்மைக்காகவிருக்குமாதலாலும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயர்.*

**1.** இச்சட்டம், 1999 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, பெரிய மௌலானா, ஸெய்ன் மௌலானா ஸியாரங்கள் மற்றும் தக்கியாக்கள் அபிவிருத்திச்சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

*பெரிய மௌலானா ஸெய்ன் மொவலானா ஸியாரங்கள் மற்றும் தக்கியாக்கள் அபிவிருத்திச் சங்கத்தைக் கூட்டிணைத்தல்.*

**2.** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதற்குப் பின்னரும் (இதனகத்துப்பின்னர் "அபிவிருத்திச்சங்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பெரிய மௌலானா, ஸெய்ன் மௌலனா ஸியாரங்கள் மற்றும் தக்கியாக்கள் அபிவிருத்திச் சங்கத்தின் உறுப்பினர்களாக இப்போதுள்ளவர்களும் அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படுபவர்களுமான அத்தகையோரான அத்தனை ஆட்களும் "பெரிய மௌலானா, ஸெய்ன் மௌலானா ஸியாரங்கள் மற்றும் தக்கியாக்கள் அபிவிருத்திச்சங்கம்" என்னும் பெயரின் கீழும் மகுடத்தின் கீழும்

இடையறாவழியுரிமைகொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன் றாதல் வேண்டும். (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்). அப்பெயர் கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் அது வழக்குத் தொடுக்கலாமென்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும் பயன்படுத்தவும் விரும்பியாங்கு அதனை மாற்றவும் முழுத்தத்துவமும் அதிகாரமும் கொண்டிருத்தல் வேண்டும்.

கூட்டுத்தபானத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3.** கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக்குறிக் கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப் படுத்தப்படுகின்றது :-

(அ) ஸியாரங்கள், தக்கியாக்கள் மற்றும் முஸ்லிம் சமய யாத்திரைக்கூடங்கள் என்பவற்றை புனரமைத்தல், பே ணுதல், அபிவிருத்தி செய்தல், பராமரித்தலுக்கு உதவுதல் ;

(ஆ) அத்தகைய யாத்திரைத் தலங்களில் உதவியும், உபசரிப்பும் அமைதியும் தேடிவரும் யாத்திரிகர்களின் அல்லது இஸ்லாமிய கடப்பாடுகளைக் கடைப்பிடிக்கும் அல்லது தொழுகை மற்றும் வழிபாடு என்பவற்றை அனுசரிக்க விரும்புவோரின் நலன்களையும் வசதிகளையும் மேம்படுத்தல் ;

(இ) பொதுவக முஸ்லிம்களின் மத, கலாசார கல்வி மற்றும் பொருளாதார நலன்களையும் நலனோம்பு விடயங்களையும் மேம்படுத்தல் ;

(ஈ) ஸியாரங்களுக்கும் தக்கியாக்களுக்கும், விஜயம் செய்யும் முஸ்லிம் மார்க்கத்தைத் தழுவிய ஏழைகளுக்கும் ஏனைய தேவைப்பட்டோருக்கும், நோயாளிகளுக்கும், வயது முதிர்ந்தோர்களுக்கும், நிவாரணங்களையும் உதவியையும் வழங்குவதுடன் பொதுவில் முஸ்லிம் சமூகத்திற்கு சமூகசேவை அடிப்படையில் பொருட்களையும் கல்வி மற்றும் பயிற்சி வசதிகளையும் ஏனைய எல்லாவித விவரண நிவாரணங்களையும் ஏற்பாடு செய்தல் ;

(உ) புனித குர்ஆனையும், அறபையும் கற்பிப்பதற்கு முஸ்லிம் சமயப் பாடசாலைகளை நிறுவுதலும் அவற்றைப் பராமரித்தலும் அத்துடன் ;

(ஊ) மேற்படி குறிக்கோள்கள் அனைத்தையும் அல்லது அவற்றுள் எதனையும் எய்துவதற்கு உசிதமான அல்லது இடைநேர்விளைவான அத்தகைய வேறு செயல்களையும் கருமங்களையும் செய்தல்

கூட்டுத்தாபனத்தின் பொதுவான தத்துவங்கள்.

**4.** இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு அமைவாக, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் எதையேனும் மேம்படுத்துவதற்கு அல்லது முனேற்றுவதற்கு அவசியமானவாறான அல்லது விரும்பத் தக்கவாறான எத்தன்மையனவுமான அத்தகைய எல்லாச் செயல்களையும் கருமங்களையும் காரியங்களையும் செய்யவும், புரியவும், நிறைகளையும் காரியங்களையும் செய்யவும், புரியவும், நிறை வேற்றவும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும், இத்தத்துவத்துள் வங்கிக் கணக்குகளைத் தொடங்குதல், செயற்படுத்துதல் அல்லது முடிவுறுத்தல் என்பவற்றுக்கும் பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பின்றி பணங்களைக் கடனாகப் பெறுவதற்கும் அல்லது திரட்டு வதற்கும், கொடைகளையுதம், நன்கொடைகளையும் பெறுவதற்கும் அல்லது சேகரிப்பதற்கும் அவற்றை முதலீடு செய்வதற்கும் அல்லது செலவழிப்பதற்கும் கூட்டுத்தாபனத்துக்குத் தேவையான அலுவலர்களையும், சேவையயாளர்களையும் வேலையிலீடுபடுத்தல், வேலைக்கமர்த்தல், வேலையிலிருந்து நீக்கல் என்பவற்றுக்குமான தத்துவமும் அடங்கும்.

கூட்டுத்தபனத்தின் அலுவல்களை முகாமைசெய்தல்.

**5.** (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள் அப்போதைக்கு வலுவிலுள்ள கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கிணங்கத் தேர்ந் தெடுக்கப்படும் அத்தகைய எண்ணிக்கையினரான ஆட்களைக் கொண்டமைந்த நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை ஒன்றனால் அத்தகைய விதிகளுக்கமைய நிருவகிக்கப்படல் வேண்டும்.

(2) இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு முன்னைய நாளன்று பதவி வகிக்கும் அபிவிருத்திச் சங்கத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையே கூட்டுத்தாபனத்தின் முதலாலது நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையாதல் வேண்டும். இச்சட்டத்திற்கான அட்டவணையில் நமிபிக்கைப் பொறுப்பாளர்சபை உறுப்பினர்களின் பெயர்கள் தரப்பட்டுள்ளன.

*கூட்டுத்தாபனத்தின் விதிகள்.*

**6.** (1) காலத்துக்குக்காலம் ஏதேனும் பொதுக்கூட்டம் ஒன்றில் சமூகமாயிருந்து வாக்களிக்கும் ஸெய்ன் சக்காப் ஸெய்த் மௌலானா வம்சாவழியினரான உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்குகளைக்கொண்டு, உறுப்பினர்களைச் சேர்த்துக் கொள்ளல், அவர்கள் விலகுதல், கூட்டுத்தாபனத்தின் அல்லது வெளியேற்றுதல், பதவிதாங்குநர்களையும் நம்பிக்கைப் பொறுப்பாளர்சபை உறுப்பினர்களையும் தெரிவுசெய்தல், பதவிதாங்குநர்கள் நம்பிக்கைப் பொறுப்பாளர்சபை உறுப்பினர் களின் தத்துவங்கள், நடத்தை, கடமைகள் என்பவற்றுக்காகவும், கூட்டுத்தாபனத்தினதும் நம்பிகைப் பொறுப்பாளர் சபையினதும் கூட்டங்களில் அலுவல்களைக் கொண்டு நடாத்துவதில் பின்பற்றப்படவேண்டிய நடவடி க்கை முறைக்காகவும், பொதுவாக கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்வதற்கும் அதன் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காகவும், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அல்லது வேறெதெனும் எழுத்திலான சட்டத்திற்கும் ஒவ்வாதனவாகவிராத விதிகளை ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும். அத்தகைய விதிகள் ஆக்கப்பட்டதும் அதேபோன்ற கூட்டத்திலும் அதேமுறையிலும் அவை மாற்றப்பட்டலாம், திருத்தப்படலாம், நீக்கப்படலாம், அல்லது அவற்றுக்கு எதுவும் சேர்க்கப்படலாம்.

(2) கூட்டுத்தாபனபத்தின் உறுப்பினர்கள் கூட்டுத் தாபனத்தின் விதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனம் அசைவுள்ள. அசைவற்ற ஆதனங்களை வைத்திருக்கலாம்.*

**7.** (1) கூட்டுத்தாபனமானது, ஏதேனும் கொள்வனவு, மானியக் கொடை, கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு ஆகியவற்றின் பயனைக்கொண்டு அல்லது வேறுவகையாக அதற்கு உரித்தாக்கப்படக்கூடிய அசைவற்ற, அசைவுள்ள ஏதேனும் ஆதனத்தைக் கையேற்கவும், வைத்திருக்கவும் சட்டப்படி ஆற்றலுடையதாதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய எல்லா ஆதனங்களும், அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறு வகையில் கையுதிர்க்கவுள்ள முழுத்தத்துவத்துடன், இச் சட்டத்தின நோக்கங்களுக்காகவும், சொல்லப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமையவும், கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப் படுதலும் வேண்டும்.

*அபிவிருத்திச் சங்கத்திடமிருநது செல்மதியாக வுள்ளனவும் அதற்குச் செலுத்தப்பட வுள்ளனவுமான தனிசுகள்.*

**8.** இச்சட்டம் நடைமுறைக்குவரும் திகதிக்கு முன்னைய நாள் அபிவிருத்திச் சங்கத்திற்கு இருந்துவந்த எல்லாத் தனிசுகளும் பொறுப்புகளும் இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் சொல்லப்பட்ட அபிவிருத்திச் சங்கத்திற்கு வருமதியாகவுள்ள எல்லாத் தனிசுகளும் செலுத்தப்படற்குரிய ஒப்பப்பணங்கள் , உதவுதொகைகள் ஆகியனவும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**9.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையின் இரு உறுப்பினர்கள் முன்னிலையிலன்றி எத்தகையதுமான சாதனம் எதிலும் பொறிக்கப் படலாகாது, அவர்கள் சமுகமாயிருந்ததற்கு அத்தாட்சியாக அச்சாதனத்தில் அவர்களது பெயர்களை எழுதிக் கையொப்ப மிடுதல் ேண்டும். அப்படிக் கையொப்பமிடுதலானது எவனேனுமாள் சாட்சியாகக் கையொப்ப மிடுவதற்குத் தனிவேறானதாதல் வேண்டும்.

*குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணல்.*

**10.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளது எதுவும். குடியரசின் உரிமைகளையேனும் ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட் குழுவினது உரிமைகளையேனும் இச்சட்டத்திற் குறிப்பிடப்பட்டவர்களும் அவர்கள் மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்கள் கீழ் உரிமை கோருபவர்களும் தவிர்ந்த வேறு எவரேனும் ஆட்களின் உரிமைகளையேனும் பங்கப்படுத்தலாகாது அல்லது பாதித்தலாகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**11.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

## அட்டவணை (பிரிவு 5 (2))

நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை

1. சங்கைக்குரிய ஸெய்யித் ஒமர் பாருல் பா அலவி மௌலானா
2. சங்கைக்குரிய ஸெய்யித் அலி ஹிப்ஷி மௌலானா
3. சங்கைக்குரிய ஸெய்யித் ஆப்தாப் ஒமர் பா அலவி மௌலானா
4. சங்கைக்குரிய ஸெய்யித் தாரிபிஷ் ஒமர் பாருல் பா அலவி மௌலானா

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387; (வெளிநாடு) ரூபா 1,849; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம் இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.*